©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 260] CHENNAI, FRIDAY, AUGUST 27, 2010
Aavani 11, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர்.**

**தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், கண்ணந்தங்குடி மேலையூர் கிராம ஊராட்சித்தலைவர் பதவி நீக்கம் செய்துள்ளதனை மீள உறுதி செய்து அறிவிக்கை.**

*(ந.க. எண் 7011/2008/அ3.)*

**No. VI(2)/412(c)/2010.**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், கண்ணந்தங்குடி மேலையூர் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. ப. ராமசாமி என்பவர் மேற்படி ஊராட்சியில் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் செய்து ஊராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியதற்காக, 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 205(11)–ன்படி, பதவி நீக்கம் முடிவு செய்யப்பட்டு, 18–03–2009 தேதிய ***தமிழ்நாடு அரசிதழ்*** எண் 10–ல் பதவி நீக்க அறிவிக்கை வெளியிடப்பட்டது.

இதனிடையில் கண்ணந்தங்குடி மேலையூர் ஊராட்சிக்கு ஊராட்சி மன்றத்தலைவர் பதவிக்கு தற்காலிக தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவிக்கை வழங்கி அதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P. No. 9657/2009–ன்படி அன்னார் வழக்கு தொடர்ந்து அதில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி 07–10–2009 அன்று தேர்தல் நடத்தப்பட்டு வழக்கின் முடிவுக்கு கட்டுப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் புதிய தலைவர் திரு. வீ. உதயசூரியன் ஊராட்சி மன்றத்தலைவர் பதவி வகித்து வருகிறார். இவ்வழக்கின் தீர்ப்பு பெறப்படவில்லை.

மேற்காணும் பதவி நீக்க அறிவிக்கையினை எதிர்த்து முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. ப. ராமசாமி அரசிடம் சீராய்வு மனு கொடுத்துள்ளார். சீராய்வு மனு பரிசீலனைக்குப்பின், அரசாணை (ப) எண் 35, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (ப.ரா.4) துறை, நாள் 21–01–2010–ன்படி, 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 205(12)–ல் அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, பதவி நீக்க ஆணையினை ரத்து செய்யப்பட்டு, உறுப்பினர்களின் கருத்து ஊராட்சி மன்றத்தலைவருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில் அதற்கு மாறாக ஊராட்சிகளின் ஆய்வாளர், ஊராட்சி மன்றத்தலைவரை பதவி நீக்கம் செய்ய முடிவு செய்யும்போது அதற்கான காரணத்தை தெரிவித்து, மறு விளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கி பதவி நீக்கம் செய்ய அறிவுரைகள் வெளியிடப்பட்டது.

மேற்காணும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், 19—08—2009 தேதிய சென்னை உயர்நீதிமன்ற முழு நடுவர் ஆயத்தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் அன்னாருக்கு மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கி, அன்னார் மறுவிளக்கம் சமர்ப்பிக்காத நிலையில், அரசு வழக்கறிஞரின் கருத்துரையின்படி இறுதிக் காலக்கெடு நிர்ணயித்தும் மறுவிளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு அன்னார் மறுவிளக்கம் அளிக்க வேண்டும் என்றால் தனக்கு மீண்டும் பதவி வழங்க வேண்டும் என்று தற்போது கேட்டது நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்று மட்டுமல்ல, மறுவிளக்கம் அளிக்கத் தேவையான ஒரு அவசியமான நிபந்தனையும் (essential condition) அல்ல. எனவே இவர் மறுவிளக்கம் அளிக்க ஏதும் இல்லாத நிலையிலேயே இவ்வாறு கோரியுள்ளார் என்று கருதியும், நிதி முறைகேடு மற்றும் குற்றச்சாட்டுகள் நிரூபணமாவதாலும் அன்னாரை ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்துள்ளதனை மீள உறுதி செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994—ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 262 (1)—ன்படியும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மைச் செயலர் அவர்களின் கடித ந.க. எண் 3205/ப.ரா.4/2010—1, நாள் 01—03—2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூர்,
2010 ஆகஸ்ட் 23.

**ம.சு. சண்முகம்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.